# தூய ஆரோக்கிய அன்னை திருவிழா

நவநாள் தயாரிப்பு



## தூய ஆரோக்கிய அன்னை

## நோயாளிகளின் நற்சுகமே

August 30, 2021

# அன்பில் இணைவோம்

அருட்பணி: ஆண்டவருடைய மீட்பை அறிவியுங்கள்
அவருடைய அரும்பெரும்செயல்களை எடுத்தியம்புங்கள்

Priest : Announce the salvation of the Lord
Proclaim his works among the people

மக்கள்: என்றென்றும் உள்ளது அவரது இரக்கம்
People: His mercy is everlasting

அருட்பணி: இறைவார்த்தையால் இவ்வுலகை ஒளிர்வித்த
இறைவனை நாம் வாழ்த்துவோம்
Priest : Bless the Lord our God
Who sent the Word of life into the World

அருட்பணி: ஆண்டவர் தம் செயல்களில் நீதியுள்ளவர்
அவருடைய செயல்கள் புனிதமானவை
அனைத்துலகே ஆண்டவரைப் புகழ்வாயாக
உயிருள்ள அணைத்தும் அவரின் திருநாமத்தை வாழ்த்துவதாக
People: Just is the Lord in all His ways
And Holy in all His works
Let every creature praise Him
and all living beings bless his name

# புகழ்வோம் நம் அன்னையை

அழகோவியமே எங்கள் அன்னை மரியே
உயிரோவியமே எங்கள் உள்ளங்கவர்ந்தவளே
உன் பார்வை சொல்லும் கருணையும் பதமலரின் அருமையும்
அழகே அழகே எங்கள் அம்மா நீ அழகே!

கோடான கோடிமக்கள் குறைகளைத் தீர்ப்பவளே!
கொள்ளை அழகோடு எங்கள் ஆலயம் அமர்ந்தவளே

அம்மா நீ தேரினிலே பவனி வரும் போதினிலே
ஒய்யாரமாக மனம் ஊர்வலமும் போகிறதே
யாரும் இல்லா ஏழை எங்கள் தஞ்சம் நீயே தாயே
உம்மை நம்பி வந்தோம் இங்கு உள்ளதெல்லாம் தந்தோம்
உந்தன் முகத்தைப் பார்க்கும்போது உள்ளம் மகிழுதே
உந்தன் நாமத்தைச் சொல்லும்போது நெஞ்சம் இனிக்குதே.

ஆதாரம் நீயே என்று அண்டி வருவோர்க்கு எல்லாம்
ஆதரவு தருபவளே அன்னை தாய் மாமரியே
அம்மா உன் காட்சிகளெல்லாம் ஏழைகளின் பாக்கியமே
எந்நாளும் இவர்களுக்கு உதவிடும் திருக்கரமே
கண்ணின் மணியைப்போல என்னைக்காத்திடும் தெய்வத்தாயே
மண்ணின் மைந்தர்கள் நாங்கள் உந்தன் பாதம்பற்றியே வாழ்வோம்
இன்னும் ஒருமுறை என் தாயே இனி இந்த உலகினில் பிறந்தால்
ஏழை எளியவர் முன்னாடி இங்கு புது உலகம் படைப்பாய்

## திருப்பாடலில் செபிப்போம். திருப்பாடல் 103: 1-22

ஆண்டவரை என் இதயம் ஏத்திப் போற்றுகின்றது
அவரே எனக்கு குணமும் மீட்பும் அளிப்பவர்.

என் உயிரே! ஆண்டவரைப் போற்றிடு!
என் முழு உள்ளமே! அவரது திருப்பெயரை ஏத்திடு
என் உயிரே! ஆண்டவரைப் போற்றிடு!
அவருடைய கனிவான செயல்கள் அனைத்தையும் மறவாதே!
ஆண்டவரை என் இதயம் ஏத்திப் போற்றுகின்றது
அவரே எனக்கு குணமும் மீட்பும் அளிப்பவர்.
அவர் உன் குற்றங்களையெல்லாம் மன்னிக்கின்றார்
உன் நோய்களையெல்லாம் குணமாக்குகின்றார்
அவர் உன் உயிரைப் படுகுழியினின்று மீட்கிறார்
அவர் உனக்கு பேரன்பையும் இரக்கத்தையும்
மணிமுடியாகச் சூட்டுகிறார்.

ஆண்டவரை என் இதயம் ஏத்திப் போற்றுகின்றது
அவரே எனக்கு குணமும் மீட்பும் அளிப்பவர்.

அவர் உன் வாழ்நாளை நலன்களால் நிறைவுரைச் செய்கிறார்
உன் இளமை கழுகின் இளமையென புதிதாய் பொலிவுறும்
ஆண்டவர் செயல்கள் நீதியானவை
ஒடுக்கப்பட்டோர் அனைவருக்கும் அவர் உரிமைகளை வழங்குகிறார்.
ஆண்டவரை என் இதயம் ஏத்திப் போற்றுகின்றது
அவரே எனக்கு குணமும் மீட்பும் அளிப்பவர்.

அவர் தம் வழிகளை மோசேக்கு வெளிப்படுத்தினார்
அவர்தம் செயல்களை இஸ்ரயேல் மக்கள் காணும்படிச் செய்தார்.
ஆண்டவர் அருளும் இரக்கமும் கொண்டவர்.
நீடிய பொறுமையும் பேரன்பும் உள்ளவர்.
ஆண்டவரை என் இதயம் ஏத்திப் போற்றுகின்றது
அவரே எனக்கு குணமும் மீட்பும் அளிப்பவர்.

அவர் எப்பொழுதும் கடிந்துகொள்பவர் அல்லர்.
என்றென்றும் சினங்கொள்பவரல்லர்
அவர் நம் பாவங்களுக்கேற்ப நம்மை நடத்துவதில்லை.
நம் குற்றங்களுக்கேற்ப நம்மைத் தண்டிப்பதில்லை
ஆண்டவரை என் இதயம் ஏத்திப் போற்றுகின்றது
அவரே எனக்கு குணமும் மீட்பும் அளிப்பவர்.

அவர் தமக்கு அஞ்சுவோருக்கு காட்டும் பேரன்பு
மண்ணினின்று விண்ணளவு போன்று உயர்ந்தது
மேற்கினின்று கிழக்கு எத்துணை தொலைவிலுள்ளதோ
அத்துணை தொலைவிற்கு நம் குற்றங்களை
நம்மிடமிருந்து அவர் அகற்றுகின்றார்.
ஆண்டவரை என் இதயம் ஏத்திப் போற்றுகின்றது
அவரே எனக்கு குணமும் மீட்பும் அளிப்பவர்.

தந்தை தம் பிள்ளைகள்மீது இரக்கம் காட்டுவதுபோல
ஆண்டவர் தமக்கு அஞ்சுவோருக்கு இறங்குகிறார்.
அவர் நமது உருவத்தை அறிவார்.
நாம் தூசி என்பது அவர் நினைவிலுள்ளது

ஆண்டவரை என் இதயம் ஏத்திப் போற்றுகின்றது
அவரே எனக்கு குணமும் மீட்பும் அளிப்பவர்.

மனிதர் வாழ்நாள் புல்லைப் போன்றது.
வயல்வெளிப் பூவென அவர்கள் மலர்கிறார்கள்
அதன்மீது காற்றடித்ததும் அது இல்லாமற்ப் போகிறது
அது இருந்த இடமே தெரியாமல் போகிறது.

ஆண்டவரை என் இதயம் ஏத்திப் போற்றுகின்றது
அவரே எனக்கு குணமும் மீட்பும் அளிப்பவர்.

ஆண்டவரது பேரன்போ அவருக்கு அஞ்சுவோர்மீது என்றென்றும் இருக்கும்.
அவரது நீதியோ அவர்களின் பிள்ளைகளின் பிள்ளைகள்மீதும் இருக்கும்.
அவரது உடன்படிக்கையைக் கடைப்பிடித்து
அவரது கட்டளைப்படி நடப்பதில்
கருத்தாய் இருப்போருக்கு அது நிலைக்கும்.

ஆண்டவரை என் இதயம் ஏத்திப் போற்றுகின்றது
அவரே எனக்கு குணமும் மீட்பும் அளிப்பவர்.

ஆண்டவர் தமது அரியணையை விண்ணகத்தில் நிலைநிறுத்தியுள்ளார்.
அவரது அரசு அனைத்தின்மீதும் பரவியுள்ளது.
அவர்தம் சொற்கேட்டு நடக்கும் வலிமைமிக்கோரே
ஆண்டவரின் தூதர்களே! அவரைப் போற்றுங்கள்.
ஆண்டவரின் படைகளே! அவர் திருவுளப்படி நடக்கும்
அவர்தம் பணியாளரே அவரைப் போற்றுங்கள்.

ஆண்டவரை என் இதயம் ஏத்திப் போற்றுகின்றது
அவரே எனக்கு குணமும் மீட்பும் அளிப்பவர்.

ஆண்டவரின் ஆட்சித் தலத்தில் வாழும் அனைத்துப் படைப்புகளே!

ஆண்டவரைப் போற்றுங்கள்! என்னுயிரே ஆண்டவரைப் போற்றிடு!...

ஆண்டவரை என் இதயம் ஏத்திப் போற்றுகின்றது
அவரே எனக்கு குணமும் மீட்பும் அளிப்பவர்.

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சிமை உண்டாகுக
தொடக்கத்தில் இருந்ததுபோல இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றும்
இருப்பதாக - ஆமென்.

## Psalm 103
## Thanksgiving for God's Goodness Of David.

1 Bless the Lord, O my soul,
and all that is within me,
bless his holy name.
2 Bless the Lord, O my soul,
and do not forget all his benefits—
3 who forgives all your iniquity,
who heals all your diseases,
4 who redeems your life from the Pit,
who crowns you with steadfast love and mercy,
5 who satisfies you with good as long as you live[a]
so that your youth is renewed like the eagle's.
6 The Lord works vindication
and justice for all who are oppressed.
7 He made known his ways to Moses,
his acts to the people of Israel.
8 The Lord is merciful and gracious,
slow to anger and abounding in steadfast love.
9 He will not always accuse,
nor will he keep his anger forever.
10 He does not deal with us according to our sins,
nor repay us according to our iniquities.
11 For as the heavens are high above the earth,
so great is his steadfast love toward those who fear him;
12 as far as the east is from the west,
so far he removes our transgressions from us.
13 As a father has compassion for his children,
so the Lord has compassion for those who fear him.
14 For he knows how we were made;

he remembers that we are dust.
15 As for mortals, their days are like grass;
they flourish like a flower of the field;
16 for the wind passes over it, and it is gone,
and its place knows it no more.
17 But the steadfast love of the Lord is from everlasting to everlasting
on those who fear him,
and his righteousness to children's children,
18 to those who keep his covenant
and remember to do his commandments.
19 The Lord has established his throne in the heavens,
and his kingdom rules over all.
20 Bless the Lord, O you his angels,
you mighty ones who do his bidding,
obedient to his spoken word.
21 Bless the Lord, all his hosts,
his ministers that do his will.
22 Bless the Lord, all his works,
in all places of his dominion.
Bless the Lord, O my soul.

## இறைவார்த்தைக்குச் செவிமடுப்போம்.

புனித லூக்கா எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம். லூக்கா: 1:46-56

அதைக் கேட்ட மரியா பின் வருமாறு கூறினார்: ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப்படுத்துகிறது. என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகைகொள்கிறது. ஏனெனில் அவர்தம் அடிமையின் தாழ்நிலையைக் கண்ணோக்கினார். இதுமுதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவர் என்பர். ஏனெனில் வல்லவராம் கடவுள் எனக்கு அரும்பெரும் செயல்கள் செய்துள்ளார். தூயவர் என்பதே அவர் பெயர். அவருக்கு அஞ்சி நடப்போருக்குத் தலைமுறை தலைமுறையாய் அவர் இரக்கம் காட்டி வருகிறார். அவர்தம் தோல் வலிமையைக் காட்டியுள்ளார். உள்ளத்தில் செருக்குடன் சிந்திப்போரைச் சிதறடித்து வருகின்றார். வலியோரை அறியானையினின்று தூக்கி எறிந்துள்ளார்: தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகிறார். பசித்தோரை நலன்களால் நிரப்பியுள்ளார். செல்வரை வெறுங்கையராய் அனுப்பிவிடுகிறார். மூதாதையருக்கு

உரைத்தபடியே அவர் அபிரகாமையும்அவர். தம் வழிமரபினரையும் என்றென்றும் இரக்கத்தோடு நினைவில் கொண்டுள்ளார். தம் ஊழியராகிய இஸ்ரயேலுக்குத் துணையாக இருந்துவருகிறார். மரியா ஏறக்குறைய மூன்று மாதம் எலிசபெத்தோடு தங்கியிருந்தபின் தம் வீடு திரும்பினார்.

இது நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நற்செய்தி.

**கிறிஸ்துவே உம்மைப் புகழ்கின்றோம்.**

## Luke 1:46-56. Mary's Song of Praise

46 And Mary[a] said,
"My soul magnifies the Lord,
47 and my spirit rejoices in God my Savior,
48 for he has looked with favor on the lowliness of his servant.
Surely, from now on all generations will call me blessed;
49 for the Mighty One has done great things for me,
and holy is his name.
50 His mercy is for those who fear him
from generation to generation.
51 He has shown strength with his arm;
he has scattered the proud in the thoughts of their hearts.
52 He has brought down the powerful from their thrones,
and lifted up the lowly;
53 he has filled the hungry with good things,
and sent the rich away empty.
54 He has helped his servant Israel,
in remembrance of his mercy,
55 according to the promise he made to our ancestors,
to Abraham and to his descendants forever."
56 And Mary remained with her about three months and then returned to her home.

## இறை வார்த்தையை உள்ளத்தில் இருத்தி சிந்திப்போம்.

நம் உள்ளத்தில் எழும் மன்றாட்டுக்களை நம் ஆரோக்கிய அன்னை வழியில் ஆண்டவர் இயேசுவிடம் சமர்ப்பிப்போம்.

1. அன்னையாம் திருச்சபைக்காக மன்றாடுவோம். நம் தாயத் திருச்சபையை வழிநடத்தும் நமது திருத்தந்தை பிரான்சிஸ் நமது

பேராயர் ஜோஸ் கோமஸ், மற்றும் நமது இணை ஆயர்கள் குருக்கள், இறைமக்கள் நம் அன்னை மரியாவைப் போல ஆவியின் வரங்களால் நிரப்பப்பட்டு எல்லோரையும் மகிழ்விக்கும் நற்செய்தியின் கருவிகளாகத் திகழ்ந்திட ஆண்டவரே அன்னை மரியா வழியாக உம்மை மன்றாடுகின்றோம். இறைவா!

இறைவா! புனித ஆரோக்கிய அன்னை வழியாக நங்கள் கேட்கும் மன்றாட்டுகளுக்குச் செவிசாய்த்தருளும்

2. நமது தளத்திருச்சபைக்காக மன்றாடுவோம். நமது தலைமை ஆயர் மற்றும் இணை ஆயர்கள் நமது மறைமாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பங்களிலும் இறைவார்த்தையின் ஒளியால் நிரப்பப்பட்டு மகிழ்ச்சியிலும் மனநிறைவிலும் நாளுக்கு நாள் வாழ்ந்திட வளர்ந்திட ஆண்டவரே அன்னை மரியா வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

    இறைவா! புனித ஆரோக்கிய அன்னை வழியாக நங்கள் கேட்கும் மன்றாட்டுகளுக்குச் செவிசாய்த்தருளும் .

3. அமெரிக்கா வாழ் இந்தியர்களுக்காகவும் அவர்களின் குடும்பங்களுக்காகவும் மன்றாடுவோம். அன்பிலும் மகிழ்ச்சியிலும் ஒன்றுபட்டு வாழ்ந்து உலர்கிற்கு ஒளியாய்த் திகழ்ந்திட ஆண்டவரே அன்னை மரியாவழியாக உம்மை மண்டாடுகின்றோம்.

    இறைவா! புனித ஆரோக்கிய அன்னை வழியாக நங்கள் கேட்கும் மன்றாட்டுகளுக்குச் செவிசாய்த்தருளும் .

4. புனித ஆரோக்கிய அன்னை பக்தர்களுக்காக மன்றாடுவோம். அன்னை மரியா போல பிறரன்பிலும் இறையன்பிலும் நாளுக்கு நாள் வாழ்ந்து நற்செய்திக்குச் சான்றுபகர்ந்திட அருள்வேண்டி ஆண்டவரே அன்னை மரியா வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

    இறைவா! புனித ஆரோக்கிய அன்னை வழியாக நங்கள் கேட்கும் மன்றாட்டுகளுக்குச் செவிசாய்த்தருளும் .

5. இந்தியாவிலும் உலகின் பல்வேறு நாடுகளிலும் கோவிட்-19 நோய் தொற்றால் இறந்த ஆன்மாக்களுக்கு நித்ய இளைப்பாற்றியை தந்தருளவும் நோய் தொற்றால் துன்புறுவோர்க்கு விடுதலையையும்

மருத்துவ குழுவினருக்கு பாதுகாப்பும் தந்தருள ஆண்டவரே அன்னை மரியா வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

இறைவா! புனித ஆரோக்கிய அன்னை வழியாக நங்கள் கேட்கும் மன்றாட்டுகளுக்குச் செவிசாய்த்தருளும் .

6. நமது தனிப்பட்ட தேவைகளுக்காக: .......ஆண்டவரே அன்னை மரியா வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

இறைவா! புனித ஆரோக்கிய அன்னை வழியாக நங்கள் கேட்கும் மன்றாட்டுகளுக்குச் செவிசாய்த்தருளும் .

விண்ணகத்தில் இருக்கின்ற ...

# தூய ஆரோக்கிய அன்னை நவநாள் செபம்

மகா பரிசுத்த கன்னிகையே! இயேசுவின் தயாராயிருக்குமாறு
பரிசுத்த மூவொரு கடவுளால் தேர்ந்துகொள்ளப்பட்ட தூய கன்னிமரியே!
கடவுளுடைய திருப்புதல்வர் உமது திருஉதரத்தில்
மனிதராக அவதரித்தபோதும் ஒன்பது மாதமளவாக
அவரை உமது மாசணுகாத கருவில் தாங்கியபோதும்
நீர் அடைந்த பேரின்பத்தை உமது ஊழியர்களாகிய நாங்கள்
நினைவுகூர அருள்கூர்ந்தமைக்கு உமக்கு நன்றி கூறுகின்றோம்.
எமது அன்பினாலும் தூய வாழ்வினாலும் நீர் அடைந்த பேரின்பத்தை
நாங்களும் அடைய எங்களுக்காக மன்றாடும் தாயே!
துன்பப்படுவோரின் தாயே! இரக்கமிக்க அன்னையே!
நீர் அனுபவித்த பேரின்பத்தைக் கொண்டாடுபவர்களுக்கு
நீர் வாக்களித்துள்ள விசேஷ உதவியையும் பாதுகாப்பையும்
எங்களுக்கு இவ்வேளையில் பெற்றுத்தந்தருளும்.
கேளுங்கள் கொடுக்கப்படும் என்ற உம்மகன் இயேசுக்கிறிஸ்துவின்
வல்லமைமிக்க வார்த்தையில் நம்பிக்கைகொண்டு
உமது வல்லமைமிக்க மன்றாட்டுகளில் நம்பிக்கைகொண்டு
இந்த நவநாட்களில் நாங்கள் செய்யும் விண்ணப்பங்களை

கடவுளுடைய திருவுளத்திற்கு மாறாயிருந்தால்
எமக்கு எவ்வரம் மிகவும் தேவையோ அவற்றைப் பெற்றுத்தந்தருளும்.

(இங்கு நமது மன்றாட்டுகளை நினைவிற்கொள்ளவும்).

இறைவனின் தாயே! இப்போது உமக்கு வணக்கமாக
நாங்கள் செய்யும் இந்த நவநாளை உம்மில்கொண்டிருக்கும்
ஆழ்ந்த நம்பிக்கையின்பொருட்டு செய்கின்றோம்.
இயேசு மனிதராக அவதரித்தபோது
உமது திருவுளம் அடைந்த தெய்வீக மகிழ்ச்சியை
அதற்கு வணக்கமாக நாங்கள் செய்யும் இந்த நவநாள் பக்தி முயற்சியையும்
இப்பொழுது நாங்கள் சொல்லப்போகும்
அருள் நிறைந்த செபத்தையும் அன்போடு ஏற்றுக்கொள்ளும் தாயே!.

(9 -முறை அருள் நிறைந்த செபம்).

நீர் அணிந்த மணிமுடியில்,
எம் செபங்கள் அத்தனையும் விண்மீன்களென துலங்குமென
ஆழ்ந்த நம்பிக்கைகொள்கிறேன்.
வருந்துவோர்க்கு ஆறுதலே! எம் வேளைநகர் ஆரோக்கியத்தாயே!
நாங்கள் உம்மிடம் மன்றாடும் விண்ணப்பங்கள் நிறைவேறுமாறு
உமக்கு வணக்கமாக இதுவரை புனிதர்களால் செய்யப்பட்ட
எல்லா அரும்பெரும் நிகழ்வுகளையும் உமக்கு ஒப்புக்கொடுக்கின்றேன்
உமது திருமகனும் எங்கள் ஆண்டவருமான
இயேசு கிறிஸ்துவின் திருஇதயத்தில் பொங்கி வழியும் பேரன்பையும்
அதுபோன்ற உமது அன்பையும் நினைவிற்கொண்டு
உமது அடியார்களாகிய எங்கள் செபத்தை ஏற்று
எம் மன்றாட்டுகளை அடைந்து தந்தருளும் அம்மா. ஆமென்.

## அன்னைக்கு நம் அஞ்சலி.

ஆரோக்கிய மாதாவே - உமது
புகழ்ப்பாடி துதித்திடுவோம்
எந்நாளும் பாடித்துதித்திடுவோம்

அலைகள் மோதிடும் கடற்கரைதன்னில்
வாசித்திட ஆசை வைத்தாயே

பல வகை கலைகளும் பரிலினில் துலங்கிட
அனைவருக்கும் துணைபுரிந்தாயே.

தேன்கமலும் சோலை சூழ்ந்து விளங்கும்
வேளாங்கண்ணியில் அமர்ந்தாயே
வானகமும் இந்த வையகமும்
செழித்தோங்கிட அருள் புரிந்தாயே

## செபிப்போமாக

பேரன்புமிக்க தந்தையே இறைவா
உமது ஆவியின் ஆற்றல் மிக்க வல்லமையால்
தூய கன்னிமரியாளிடம் உமது படைப்பின் முதற்கனியை
தோன்றத் செய்த உமது பேராற்றலை எண்ணிமகிழ்கின்றோம்
நங்கள் அதே ஆவியின் வல்லமையால்
பாவத்தின் அடிமைத்தளையிலிருந்து விடுதலைப்பெற்று
முழு இதயத்தோடும் ஆன்மாவோடும் நற்செய்தித்தரும்
புதுவாழ்வை எங்கள் சொல்லிலும் செயலிலும்
பிரதிபிலிக்கச் செய்தருளும். உம்மோடு தூய ஆவியின் ஒன்றிப்பில்
இறைவனாய் வாழ்ந்து ஆட்சிசெய்கின்ற எங்கள் ஆண்டவராகிய இயேசு
கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம். ஆமென்

**நோயாளிகளின் நற்சுகமே தூய**

**ஆரோக்கிய அன்னையே**

எங்களுக்காக
வேண்டிக்கொள்ளும்

